நாள் 03.09.2024

அசல் வழக்கு எண் 66/2021

வா சா 1 தங்கபெருமாள்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் 999/6 ஏ 12 ஆகும். எனது பிராதிலும் முதல் விசாரணை வா்க்குமூலத்திலும் நான்குமால் எல்கைக்குட்பட்டு பத்திரம்வாங்கியதாக சொல்லியிருக்கிறேன் ஆனால் வா.சா.ஆ.1 பத்திரத்தில் நான்கு மால் கூறவில்லை என்று சொன்னால் எனக் கு தெரியவில்லை. வா.சா.ஆ 1 பத்திரத்தின் அசல எங்கு உள்ளது என்றால் கூட்டுறவு வங்கியில் இருக்கிறது. கூட்டுறவு வங்கியில் வாச.ா-ஆ.1 அசல் பத்திரம் உள்ளதாக வில்லங்க சான்றிதழ் தாக்கல் செயதிருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள வில்லங்க சான்றிதழ் 999/6 ஏ 11 ஆனது என்றும் அதற்கும் தாாவ சொத்திற்கும் எந்த சம்மந்தமும இல்லை என்று சொன்னால சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில்கிழமேல் தென்வடல் அளவுக்ளசொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 பத்திரத்ததல கிழமேல் தென்வடல் அளவுக்ள சொல்லாத நிலையிலும் நான்கு மால எல்கைகள் குறிப்பிடாத நிலையிலும் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனதுபிராதிலும் நான்கு மால் எல்கை குறிப்பிடவில்லை எனறு சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான். செல்லமாளின் சொதது எனது சொத்திறகு் தெற்கு பக்கம் இருக்கிறது. அதனால தாக்கல் செய்திருக்கிறேன். நான் தாககல்செய்துள்ள வா.சாஆ.3, 4 ஆவணங்களுக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்று சொன்னால்

சரியல்ல. வழக்கு சொத்திறகு மேற்கே பாதைஉள்ளது என்றால் பாதைஇல்லை. வழக்கு சொத்திற்கு பாதை உள்ளது என்றும் அந்த பாதைக்கும் பிரதிவாதி வீடு உள்ளது என்று சொன்னாலும் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.